Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 23.04.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : மலர்விழி

தேதி : 23.04.2026 – வியாழக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------------------------------

***தலைப்புச் செய்திகள்***

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், ரிஷிகேஷில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் 6ஆவது பட்டளிப்பு விழாவில் கலந்து கொண்டார்.

இந்தியாவை முதலீட்டிற்கு ஏற்ற இடமாக மாற்றுவதற்கு, மத்திய அரசு தொடர்ச்சியான சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

தமிழகத்தின் 234 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு ஒரே கட்டமாகவும், மேற்கு வங்கத்தில் முதற்கட்டமாக 152 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் இன்று வாக்குப் பதிவு, நடைபெற்றது.

கடந்த 12 ஆண்டுகளில் இந்தியாவின் கடல்சார் துறை, ஈடு இணையற்ற வளர்ச்சியின் கேந்திரமாக மாறியுள்ளது என்று, மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

*ராதாகிருஷ்ணன் (18)*

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், உத்ரகண்ட் மாநிலம், ரிஷிகேஷில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் 6ஆவது பட்டளிப்பு விழாவில் கலந்து கொண்டார். இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய எய்ம்ஸின் நிர்வாக இயக்குநர் பேராசிரியர், டாக்டர் மீனு சிங், இந்த பட்டமளிப்பு விழா மாணவர்களின் கல்விச் சாதனைகளை கொண்டாடுவது மட்டுமல்லாமல், நாட்டிற்காக அர்ப்பணிப்புள்ள, திறமையான மற்றும் அறநெறி சார்ந்த சுகாதார வல்லுநர்களை உருவாக்குவதில் ரிஷிகேஷில் உள்ள எய்ம்ஸ் கொண்டுள்ள உறுதிப்பாட்டின் சின்னமாகத் திகழ்கிறது என்று கூறினார்.

இந்த 6ஆவது பட்டமளிப்பு விழாவில் பல்வேறு பாடப்பிரிவுகளைச் சேர்ந்த மொத்தம் 386 மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கப்பட்டதாக, அதன் செயல் இயக்குநர் தெரிவித்துள்ளார். மேலும், இந்த நிகழ்ச்சியில், வெவ்வேறு பாடப்பிரிவுகளில் சிறப்பான செயல்பாடுகளை வெளிப்படுத்திய மாணவர்களுக்கு 13 தங்கம், 5 வெள்ளி மற்றும் 5 வெண்கலப் பதக்கங்கள் உட்பட மொத்தம் 23 பதக்கங்கள் வழங்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், அம்மாநில ஆளுநர் திரு. குர்மித் சிங், முதலமைச்சர் திரு. புஷ்கர் சிங் தாமி மற்றும் மத்திய சுகாதார குடும்ப நலத்துறை இணையமைச்சர் திருமதி. அனுபிரியா படேல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

*ஓம் பிர்லா (14)*

கல்வி என்பது அறிவை பெறுவதற்கான ஒரு ஊடகம் மட்டுமல்ல, முழுமையான ஆளுமை மேம்பாடு மற்றும் வாழ்க்கை விழுமியங்களை உள் வாங்குவதற்கான செயல்முறை என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா கூறினார். புதுடெல்லியில் உள்ள டெல்லி பப்ளிக் பள்ளியின் வருடாந்திர விழாவில், இன்று கலந்து கொண்டு பேசிய அவர், இன்றைய மாறிவரும் சூழலில் இளைஞர்களின் கண்டுபிடிப்புகள், ஆழ்ந்த சிந்தனை மற்றும் தொழில்நுட்பத்துடன் முன்னேறுவது அவசியம் என்று வலியுறுத்தினார்.

தேசிய கல்விக்கொள்கை 2020-ன் மூலம், நாட்டின் கல்வி முறை ஒரு புதிய திசையை நோக்கி செல்வதாகவும், இது மாணவர்களிடையே ஆர்வம், திறமை மற்றும் திறன்களை வளர்க்கிறது என்றும் திரு. ஓம் பிர்லா கூறினார். இளைஞர்களிடையே ஜனநாயக புரிதலை வளர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், வளர்ந்த இந்தியா 2047 என்ற உறுதியை நனவாக்குவதில் மாணவர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

*ராஜ்நாத் (18)*

தொழில் செய்வதை எளிதாக்குவதற்கும், இந்தியாவை முதலீட்டிற்கு ஏற்ற இடமாக மாற்றுவதற்கும் கடந்த 10 ஆண்டுகளில் நாடு

தொடர்ச்சியான கட்டமைப்பு சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறினார். ஜெர்மனியின் மியூனிக்-கில், இன்று நடைபெற்ற பாதுகாப்பு முதலீட்டாளர் உச்சி மாநாட்டில், உரையாற்றிய அவர், சிறப்பு தொழில்நுட்பத் துறையில் இந்தியாவுடன் இணைந்து உற்பத்தித் துறையில், செயல்பட ஜெர்மன் தொழில் முனைவோர்களுக்கு அழைப்பு விடுத்தார்.

இந்தியா மற்றும் ஜெர்மன் பாதுகாப்பு தொழில் தலைவர்கள் இடையே கலந்துரையாடிய அவர், மேம்பட்ட ரேடார், சென்சார் தொழில்நுட்பம் மற்றும் செயற்கை நுண்ணறிவு மூலம் இயங்கும் ஆளில்லா வான்வழி அமைப்புகள் ஆகிய துறைகளில் இணைந்து உற்பத்தி செய்ய இந்திய நிறுவனங்கள் ஆர்வமாக உள்ளன என்பதை வலியுறுத்தினார்.

உலகின் அதி வேகமாக வளர்ந்து வரும் மற்றும் நிலையான பொருளாதாரங்களில் இந்தியாவும் ஒன்றாக விளங்குகிறது என்று பெருமிதம் தெரிவித்த அவர், இந்தியா வளர்ந்த நாடாக மாறுவதற்கான பயணத்தில் பாதுகாப்புத் துறையின் முக்கிய பங்கை நாடு அங்கீகரித்துள்ளது என்றும் கூறினார்.

***ஜெய்சங்கர் -1 (4)***

சிக்கலான புவிசார் அரசியல் சவால்களை உலகம் கடந்து செல்வதால், இந்தியா – ஆப்பிரிக்கா கூட்டாண்மை, முக்கியத்துவம்

பெறுகிறது என்று, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் கூறினார். இது குறித்த கூடுதல் தகவல்கள்...

(வாய்ஸ்)

***ஜெய்சங்கர் - 2 (15)***

(வாய்ஸ்)

வரும் மே மாதம் 28ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரை நடைபெற உள்ள, இந்தியா – ஆப்பிரிக்கா மன்ற உச்சி மாநாட்டின் சின்னம், கருப்பொருள் மற்றும் இணையதளத்தை இன்று வெளியிட்ட அவர், புதுடெல்லியில், இந்த உச்சி மாநாட்டின் முன்னோட்ட நிகழ்ச்சியில் உரையாற்றினார்.

இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையில் ஆப்பிரிக்கா முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது என்றும், கடந்த சில ஆண்டுகளில், ஆப்பிரிக்காவில், இந்தியா தனது தூதரக தடத்தை விரிவுப்படுத்தி உள்ளது என்றும் அவர் கூறினார். ஆப்பிரிக்க கண்டம் முழுவதும், 17 புதிய தூதுரகங்கள் திறக்கப்பட்டுள்ளன என்றும், இதன் மூலம் அங்குள்ள தூதரகங்களின் எண்ணிக்கை 46ஆக உயர்ந்துள்ளது என்றும், டாக்டர் ஜெய்சங்கர் கூறினார்.

உலகளாவிய நிர்வாகத்தில் ஆப்பிரிக்காவிற்கு இந்தியா தொடர்ந்து ஆதரவு அளித்து வருவதை சுட்டிக் காட்டிய அவர், ஆப்பிரிக்கா உடனான

இந்தியாவின் ஈடுபாடு, சமத்துவம், பரஸ்பர மரியாதை மற்றும் பகிரப்பட்ட முன்னேற்றம் என்ற கொள்கையில் வேரூன்றி உள்ளதாகவும், கூறினார்.

***ஜெய்சங்கர் - 3 (9)***

மேலும், வர்த்தகம், கலாச்சார பரிமாற்றங்கள் மற்றும் மனிதத் தொடர்புகள் மூலம் பல நூற்றாண்டுகளாக வளர்க்கப்பட்ட நாகரிக இணைப்புகளில் இந்தியா – ஆப்பிரிக்கா இடையேயான உறவு ஆழமாக உள்ளது என்றும் காலனித்துவத்திற்கு எதிரான போராட்டத்தில், ஆப்பிரிக்க நாடுகளுடன் இந்தியா ஒற்றுமையுடன் நின்றதால், இரு நாடுகளுக்கும் இடையிலான பிணைப்பு மேலும் வலுப்பெற்றுள்ளது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் பெருமிதம் தெரிவித்தார்.

ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய வர்த்தக கூட்டாளிகள் மற்றும் இரு தரப்பு முதலீட்டாளர்களில் ஒன்றாக இந்தியா உருவெடுத்துள்ளது என்றும் டாக்டர் ஜெங்சங்கர் எடுத்துரைத்தார்.

***மோடி (11)***

ரயில் தண்டவாளங்களை நவீனமயமாக்குவதால், விரைவான மற்றும் நம்பகமான கட்டமைப்பு மையமாக ரயில்வே துறை இயக்கப்படுகிறது என்று, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார். மத்திய ரயில்வே துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், ஆங்கில நாளிதழ்

ஒன்றில் எழுதிய கட்டுரையை பகிர்ந்து கொண்ட பிரதமர், ரயில்பாதை புதுப்பித்தல், மேம்பட்ட சோதனை மற்றும் இயந்திர மயமாக்கப்பட்ட பராமரிப்பு ஆகியவை பயணத்தின் தரத்தை மேம்படுத்தி உள்ளன என்றும், இந்த மாற்றங்கள், தாமதங்களை குறைத்து, சுமூகமான பயணங்களை மேற்கொள்ள உதவுகின்றன என்றும், கூறினார். மேலும், நாடு முழுவதும் அதிகரித்து வரும் பயணிகள் மற்றும் சரக்குத் தேவையை பூர்த்தி செய்ய இந்த மாற்றங்கள் உதவுகின்றன என்றும், பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறினார்.

***தமிழக தேர்தல் -1 (2)***

தமிழகத்தில் 234 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு ஒரே கட்டமாக இன்று வாக்குப்பதிவு அமைதியாகவும், விறுவிறுப்பாகவும் நடைபெற்றது. தமிழ்நாட்டில், மாலை 5.30 மணி வரை 70 சதவிகித வாக்குகள் பதிவாகி உள்ளது. இது குறித்த கூடுதல் தகவல்கள்...

**(வாய்ஸ்)**

***தமிழக தேர்தல் - 2 (18)***

**(வாய்ஸ்)**

தமிழகத்தில் பலத்த பாதுகாப்பிற்கு இடையே இன்று காலை 7 மணிக்குத் தொடங்கிய வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை நடைபெற்றது. மாலை 6 மணி வரை வாக்குச் சாவடிகளில் காத்து நிற்கும் வாக்காளர்கள்

வாக்களிக்க, கூடுதல் கால அவகாசம் வழங்கப்படும் என்று தேர்தல் ஆணையம் கூறியுள்ளது. தமிழகம் மற்றும் மேற்கு வங்கம் சட்டப் பேரவைத் தேர்தலில், அனைத்து வாக்காளர்களும் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டும் என பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தினார். இளையோரும், பெண்களும் தங்கள் வாக்குகளை கட்டாயம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார். காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கேவும், வாக்காளர்கள் அனைவரும் தங்களது ஜனநாயக கடமையை நிறைவேற்ற வேண்டும் என்று தமது சமூக ஊடகப் பதிவில் வேண்டுகோள் விடுத்தார்.

தமிழகத்தில், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், அஇஅதிமுக பொதுச் செயலர் திரு. எடப்பாடி பழனிசாமி, துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், பிஜேபி தேசிய மகளிர் அணி தலைவர் திருமதி. வானதி ஸ்ரீனிவாசன், தவெக தலைவர் திரு. விஜய், நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் ஆகியோர், தத்தம் தொகுதிகளில் வாக்கு செலுத்தினர்.

***தமிழக தேர்தல் - 3 (7)***

தமிழகம் முழுவதும் 75 ஆயிரத்து 64 வாக்குச் சாவடி மையங்களில் வாக்குப் பதிவு நடைபெறுவதை ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 128

கண்காணிப்பு கேமராக்கள் மூலம் தலைமைச் செயலகத்தில் தேர்தல் ஆணையம் கண்காணித்து வருகிறது.

தேர்தலையொட்டி, நீலகிரி மாவட்டத்தில் வாக்குப் பதிவை உறுதி செய்யும் வகையில், சுற்றுலாத் தலங்கள் இன்று ஒருநாள் மட்டும் மூடப்பட்டுள்ளதாக, அறிவிக்கப்பட்டுள்ளது.

***சர்பானந்த சோனோவால் (14)***

கடந்த 12 ஆண்டுகளில் இந்தியாவின் கடல்சார் துறை ஈடு இணையற்ற வளர்ச்சியின் கேந்திரமாக மாறியுள்ளது என்று, மத்திய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழித்துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார். இந்தியாவின், கடல்சார் எழுச்சியை எடுத்துரைத்த அவர், சாகர்மாலா திட்டத்தின் மூலம் இந்தியா வரலாற்று மைல் கற்களை எட்டியுள்ளது என்று சமூக ஊடகப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

உள்நாட்டு நீர் சரக்குப் போக்குவரத்து 7 மடங்கு அதிகரித்து உள்ளதையும், கடந்த நிதியாண்டில் 915 மெட்ரிக் டன் சரக்கை கையாண்டதில் சாதனை அளவாக இருப்பதையும் அவர் சுட்டிக் காட்டினார். இந்தியாவின் கடல்சார் பயணம் உள்கட்டமைப்பு உருவாக்கத்தில் இருந்து சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கான மாற்றத்தை பிரதிபலிக்கிறது என்று கூறிய திரு. சோனோவால், செயல்திறன் மற்றும்

உள்ளடக்கம் ஆகியவற்றை இணைப்பதன் மூலம் இந்தத் துறை வர்த்தகத்தை வலுப்படுத்தி, வாழ்வாதாரத்தை மேம்படுத்தி உள்ளது என்றும் கூறினார்.

***விபத்து (9)***

உத்தரப்பிரதேசத்தில் நேரிட்ட சாலைவிபத்தில் 4 குழந்தைகள் உட்பட 11 பேர் உயிரிழந்தனர். 10 பேர் காயமடைந்தனர். மிர்ஸாப்பூர் மாவட்டம், Dramandganj பகுதியில் மலைப்பகுதியில் இருந்து கீழே சென்றுகொண்டிருந்த லாரி கட்டுப்பாட்டை இழந்து கார்கள் மீது மோதியதில், இந்த விபத்து ஏற்பட்டதாகவும், இது குறித்து விசாரணை நடைபெற்று வருவதாகவும், காவல்துறை தெரிவித்துள்ளது. இந்த விபத்து குறித்து குடியரசு தலைவர் திருமதி. திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு ஆழந்த இரங்கல் தெரிவித்துள்ளனர்.

***சிபிஎஸ்இ (11)***

CBSE எனும் மத்திய இடைநிலை கல்வி வாரியம் 10ஆம் வகுப்புத் தேர்வின் 2ஆம் கட்டத்தை மே 15ஆம் தேதி முதல் நடத்துகிறது என்றும், தங்கள் மதிப்பெண்களை மேம்படுத்த விரும்பும் மாணவர்கள் இந்தத் தேர்வை மேற்கொள்ளலாம் என்றும், வாரியம் அறிவித்துள்ளது. தேர்ச்சி

பெற்ற அனைத்து மாணவர்களும் அறிவியல், கணிதம், சமூக அறிவியல் மற்றும் மொழிகள் ஆகிய 3 பாடங்களில், ஏதேனும் ஒன்றில் தங்கள் செயல்திறனை மேம்படுத்த அனுமதிக்கப்படுவார்கள் என்றும், இந்த முன் முயற்சி தேசிய கல்விக் கொள்கை -2020 உடன், ஒத்துப்போவதாக, வாரியம் தெரிவித்துள்ளது. மேலும் அதே கல்வி ஆண்டிற்குள் மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த 2ஆவது வாய்ப்பு தேர்வு தொடர்பான மன அழுத்தத்தை குறைக்க உதவும் என்றும் அறிவித்துள்ளது.

***காரைக்கால் (9)***

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் இருந்து சிறப்பு மருத்துவர்கள் குழு, மாதந்தோறும் 2 மற்றும் 4ஆம் சனிக்கிழமைகளில், காரைக்கால் அரசு பொது மருத்துவமனைக்குச் சென்று, அங்குள்ள மக்களுக்கு மருத்துவ சிகிச்சைகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கி வருகிறது. இதன் தொடர்ச்சியாக வரும் சனிக்கிழமை காலை 10 மணி முதல் நண்பகல் 12 மணி வரை, நாளமில்லா சுரப்பிகளில் ஏற்படும் பிரச்சனைகள், சர்க்கரை நோய் மற்றும் தைராய்டு தொடர்பான நோய்களுக்கு மருத்துவர்கள் குழு சிகிச்சை மற்றும் ஆலோசனைகளை வழங்க உள்ளது. பொதுமக்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு காரைக்கால் நிர்வாகம் கேட்டுக் கொண்டுள்ளது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி ராதாகிருஷ்ணன், ரிஷிகேஷில் உள்ள அகில இந்திய மருத்துவ அறிவியல் கழகத்தின் 6ஆவது பட்டளிப்பு விழாவில் கலந்து கொண்டார்.

இந்தியாவை முதலீட்டிற்கு ஏற்ற இடமாக மாற்றுவதற்கு, மத்திய அரசு தொடர்ச்சியான சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

தமிழகத்தின் 234 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கு ஒரே கட்டமாகவும், மேற்கு வங்கத்தில் முதற்கட்டமாக 152 சட்டப் பேரவைத் தொகுதிகளுக்கும் இன்று வாக்குப் பதிவு, நடைபெற்றது.

கடந்த 12 ஆண்டுகளில் இந்தியாவின் கடல்சார் துறை, ஈடு இணையற்ற வளர்ச்சியின் கேந்திரமாக மாறியுள்ளது என்று, மத்திய கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. சர்பானந்த சோனோவால் கூறியுள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது. AV / SM / RK